


# உதயன்

சுடர் : 41
கதிர் : 188

செவ்வாய்க்கிழமை
02 ஜூன் 2026

வைகாசி 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


# செம்மணிப் புதைகுழிக்குள் மேலும் என்புத்தொகுதிகள்

## சான்றுப் பொருள்களும் மீட்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து நேற்று மேலும் சில என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஓர் என்புத் தொகுதியின் கழுத்தில் நாணய வடிவிலான பொருளும் அடையாளம் காணப்பட்டுள்ளது.**

»11




சிறுமி துஷ்பிரயோகம்

## அநுராதபுர பிக்குவுக்கு எதிராகப் போராட்டம்!

வவுனியா, ஜூன் 2

அநுராதபுரத்தில் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த மதகுருவையும், அவருக்கு பிணை வழங்கப்பட்டதையும் கண்டித்து வவுனியாவில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது.

»11


## கூட்டணிப் பேச்சுக்கு தற்போது இடமில்லை

### பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 2

தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் வெளியிடப்படுவதற்கு முன்னர் கூட்டணிப் பேச்சுகளுக்கு இடமில்லை - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்

»11



## யாழ். பொதுநூலகம் தீக்கிரை; 45ஆவது நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 2

தென்கிழக்காசியாவின் மிகப்பெரிய நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்ட 45ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு

»11



## ஒரு கோடியே 15 லட்சம் திருட்டு; இரண்டு சந்தேகநபர்கள் கைது!

### 74 லட்சம் ரூபா பணமும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

வல்வெட்டித்துறை - கொம்மாந்துறைப் பகுதியிலுள்ள வீடொன்றில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர்

»11

## நீதிபதியின் இடமாற்றத்தில் ஆளுநருக்குத் தொடர்பில்லை

### ஆளுநர் அலுவலகம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றத்துக்கும், வடமாகாண ஆளுநருக்கும் இடையில் எந்தவொரு தொடர்பும் இல்லை என்று வடமாகாண ஆளுநர் செயலகம் ஊடக

»11

வவுனியாவில்

## ரூ.10 கோடிக்கு மேற்பட்ட பணத்துடன் வர்த்தகர் ஒருவர் தலைமறைவு!

வவுனியா, ஜூன் 2

வவுனியாவில் 10 கோடி ரூபாக்கு மேற்பட்ட பணத்துடன் வர்த்தகர் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

»11

## மோ.சைக்கிள் மோதி குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 2

மோட்டார்சைக்கிள் மோதி படுகாயம் அடைந்திருந்த குடும்பத் தலைவர் ஒருவர் மேலதிக சிகிச்சையின்போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

அச்சுவேலியைச் சேர்ந்த முருகன்

»11

மாகாணசபைத் தேர்தலில்

## ஒரு மாகாணத்தையேனும் கைப்பற்றிக் காட்டுங்கள்!

### அரசியலில் இருந்து விலகுவேன் என்று முன்னாள் அமைச்சர் கம்மன்பில சவால்

கொழும்பு, ஜூன் 2

மாகாணசபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒரு மாகாணத்தையேனும் கைப்பற்றினால் அரசியலில் இருந்து விலகத்தயார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில சவால் விடுத்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளாட்சிசபைத் தேர்தல்

»11

## தடையற்ற எரிபொருளை வழங்குவதே நோக்கம்!

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 2

எரிபொருளை தடையின்றி வழங்குவதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். அதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்

»11



முச்சந்தி முரளி

"தொட்டனைத்தூறும் மணற்கேணி, செம்மணியிலோ தோண்டத்தோண்ட எலும்புக்கூடுகள் கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4447 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 01 10 55 77 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1514 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 20 43 54 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0473 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 1 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2553 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 11 45 46 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6205 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 3 7 1 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2235 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 52 63 69 73 |
| விசேட எழுத்து | A |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 01.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0321 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 44 55 |

# மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தாது!

## ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**

**அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தாது. அவ்வாறு நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால் எல்லை நிர்ணய விவகாரத்தை குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை தொடர்ச்சியாக பிற்போடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுவது உண்மையா? அல்லது அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுவது உண்மையா?

மாகாணசபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்தமுடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுகிறார். அவரது கருத்துக்கு முரணாக அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மாகாணசபைத் தேர்தல் நடக்கும், தேர்தலுக்கு நிதி நெருக் கடி ஏதுமில்லை என்று குறிப்பிடு கிறார். மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் யார் குறிப்பிடுவது உண்மை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். நாட்டு மக்கள் தற்போது மாத இறுதியில் அச்சத்துடன் தான் வாழ்கிறார்கள்.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களை குறிப்பிட்டுக் கொண்டு ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது.

கடந்த அரசாங்கங்கள் வெளியகக் காரணிகளால் நெருக்கடிக்குள்ளான போது ஜே.வி.பி.யினர் பாடம் கற்பிப்பார்கள்.

ஆனால் இன்று அவர்கள் சர்வதேச நாணயநிதியம் கற்பிக்கும் பாடத்துக்கு அமைவாகவே செயற்படுகிறார்கள்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 01.06.2026 | திங்கட்கிழமை | 0913 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| S | 1 8 3 9 8 1 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 01.06.2026 | திங்கட்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3179 | G | 34 43 49 74 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 10 25 35 51 | 5340 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 01.06.2026 | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1009 | 03 33 50 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2026 | திங்கட்கிழமை | |
| கடகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 07 40 41 44 | 4891 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 01.06.2026 | திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 31 | 14 22 26 55 | 2355 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 01.06.2026 | திங்கட்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Y | 11 30 48 75 | 3005 |

## வெசாக் தானசாலைக்குள் புகுந்த கப்ரக வாகனம்!

### *6 பேர் உயிரிழப்பு! வாகனச்சாரதி கைது*

கொழும்பு. ஜூன் 2

வெசாக் தானசாலை ஒன்றில் உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் நின்றிருந்த மக்கள் கூட்டத்துக்கு, அதிவேகமாக வந்த 'கப்' ரக வாகனம் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து புகுந்து மோதியதில் மூன்று பெண்கள் உட்பட ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹோமாகம, மீகொடப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தானசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள், ஒரு தம்பதியினர் மற்றும் மேலும் இரண்டு பெண்களாவர்.

அத்துடன் விபத்தில் மேலும் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை விபத்தை ஏற்படுத்திவிட்டு, சம்பவ இடத்திலிருந்து தப்பியோடிய வாகனத்தின் சாரதியை மீகொட பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

விபத்து நடந்த நேரத்தில் குறித்த சாரதி மதுபோதையில் இருந்ததாக மருத்துவப் பரிசோதனையில் கண்டறியப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து மீகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## பௌத்தத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் அவசியம்!

### கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 2

சமீபகாலமாக இலங்கையில் பௌத்த சமூகத்துக்கும் ஒட்டுமொத்த தேசத்துக்கும் வேதனையை ஏற்படுத்தும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் பொதுச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பிளவைத் தடுத்து, பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய காலகட்டம் வந்துவிட்டது எனச் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். நாட்டில் சியாம், அமரபுர, ராமன்ன ஆகிய முப்பீடங்களைச் சேர்ந்த ஒட்டுமொத்தமாக 30 பிரிவுகள் இயங்கிவருகின்றன. இலங்கை முழுவதும் பதிவு செய்யப்பட்ட 12,235 விகாரைகள் உள்ளதோடு, அவற்றில் சுமார் 42,000 பௌத்த பிக்குகள் வாழ்ந்து வருகின்றனர். தற்போதைய சர்ச்சைக்குரிய சம்பவங்களால் மகாநாயக்க தேரர்களும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமும், பௌத்த மக்களும் பெரும் கவலையடைந்துள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் வழிகாட்டலின் கீழ், அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் முப்பீடங்களின் தலைவர்களை உள்ளடக்கி தேசிய உரையாடல் ஒன்றை நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## கண்டியில் சிறுமி துஷ்பிரயோகம்; தேரர், பெண்ணொருவர் கைது!

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகிரவகந்த பகுதியில் 15 வயது சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேரர் ஒருவரும், அவருக்கு உடந்தையாக இருந்த பெண்ணொருவரும் கண்டி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையின் சகோதரரான தேரரே இந்தத் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என்று கண்டி பொலிஸார் நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தத் துஷ்பிரயோகச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் 29 வயதுடைய பெண்ணொருவரும் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் தேரர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட பெண் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச-இ)


## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்; மௌலவி உட்பட இருவர் கைது

அம்பாறை , ஜூன் 2

அம்பாறை இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 14வயதுடைய சிறுமியொருவர்பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேகநபரான மௌலவி ஒருவரும், அவருக்கு உடந்தையாக இருந்த மற்றுமொரு இளைஞரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் 21 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சான்றிதழ்களுக்கான கல்வியற்ற புதிய சீர்திருத்தங்கள் அவசியம்!



## கல்வியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**

**இலங்கையில் தற்போதுள்ள கல்வி முறையானது வெறும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு கருவியாக மட்டுமே சுருங்கி விட்டது. இந்த நிலையை மாற்றி, மாணவர்களிடம் ஆழமான சிந்தனை மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டுக்குத் தேவைப்படுகின்றன என கல்வியமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் படித்து முடிக்கும் மாணவர்களின் திறன்களுக்கும், சந்தையிலுள்ள உண்மையான தொழில் வாய்ப்புகளுக்கும் இடையே பொருத்தமின்மை நிலவுகின்றது. பல தசாப்தங்களாக தொழில்நுட்பம் மற்றும் STEM கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தபோதிலும், படித்து முடித்துவிட்டு வெறும் அரச வேலைக்காக மட்டுமே வரிசையில் காத்திருக்கும் இளைஞர்களின் மனநிலையை மாற்ற தற்போதைய கல்வி முறையால் இயலவில்லை.

இலவசக்கல்வியின் உண்மையான நோக்கம் வெறும் தொழிலாளர்களை உருவாக்குவது மட்டுமல்ல, ஜனநாயக சமூகத்தை வழிநடத்தக்கூடிய அரசியல் விழிப்புணர்வும் விமர்சன ரீதியான சிந்தனையும் கொண்ட மக்களை உருவாக்குவதேயாகும்.

எதிர்கால செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பப் புரட்சியை மாணவர்கள் எதிர்கொள்ளவேண்டுமாயின், பாடசாலை மட்டத்திலிருந்தே டிஜிற்றல் கல்வியறிவையும் இணையவழிப் பாதுகாப்பையும் பலப்படுத்துவது கட்டாயம்- என்றார். (ச-இ)

# மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் அதிநவீன இயந்திரங்கள் இறக்குமதி

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கும், சிகிச்சைக்குப் பின்னரான பராமரிப்பை மேம்படுத்துவதற்கும், மருத்துவமனைகளில் நிலவும் நீண்ட காத்திருப்புப் பட்டியல்களைக் குறைக்கும்முகமாகவும் 5 அதிநவீன மேமோகிராபி இயந்திரங்களை நாட்டுக்குப் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தலின்கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களிடையே மிகவும் பொதுவாகக் காணப்படும் மார்பகப் புற்றுநோய் மற்றும் அசாதாரண கட்டிகளைக் கண்டறிவதற்காக தலா 153 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்த 5 அதிநவீன இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. தற்போது நாடு முழுவதும் உள்ள அரச மருத்துவமனைகளில் 16 மேமோகிராபி இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன. புதிய அதிநவீன மேமோகிராபி இயந்திரங்கள் கொழும்பு தேசிய மருத்துவமனை, காலி கரப்பிட்டிய தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை, அநுராதபுரம் போதனா மருத்துவமனை, அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனை என்பவற்றுக்கு வழங்கப்படவுள்ளன. (ச-இ)



# பேருந்து விபத்தில் பெண் உயிரிழப்பு

காலி, ஜூன் 2

காலி - மாத்தறை பிரதான வீதியின் வெலிகம, கப்பரதொட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் வீதியைக் கடக்க முயன்றபோது, தனியார் பேருந்து ஒன்றுடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# மரம் முறிந்து வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு

பொலநறுவை, ஜூன் 2

பொலநறுவை மனம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹவெவ பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த நபரொருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் மஹவெவ பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவராவார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மனம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-இ)

# இலங்கைத் தமிழ்ப்பெண் சென்னையில் கொலை!

## 7 பேர் கைது

சென்னை, ஜூன் 2

சென்னை கோயம்பேட்டில் காரால் மோதி இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் இலங்கை அகதிகள் முகாமில் வசித்த 18 வயதுடைய யான்சி சென்னை வந்திருந்தார்.

அங்கு தனியார் கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட முரண்பாட்டுக்குப் பின்னர், மோட்டார் சைக்கிளில் சென்றபோது அவர் மீது காரை வேகமாக மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)




# இண்டைக்கு ஆர் கூட்டுமுறை? - 2

நெடுந்தீவில ஏற்கனவே ஒரு வசதியளும் இல்லையெண்டு கிட்டடியில தான் சனங்கள் 'பொறுத்தது போதும்' எண்டு பொங்கியெழும்பி ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்தவை. இப்பிடிப்பட்ட நிலையில அங்க இருந்த ஆயுள்வேத டாக்குத்தரை இடமாற்றம் செய்யேக்க, அங்க இருக்கிற 'கார்டரை' (அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை) மத்திய அரசாங்கத்துக்கு எங்கட வடக்கு அதிகாரிமார் காட்ட மறந்து போட்டினமாம். அதாலதான் அந்த இடம்மாறினவருக்குப் பதிலா இன்னொரு ஆயுள்வேத டாக்குத்தரை நெடுந்தீவுக்குப் போட ஏலாமல் போட்டுதாம். இன்னமும் தங்களுக்கு வேலை கிடைக்காமல் எத்தினையோ ஆயுள்வேத டாக்குத்தர்மார் இருக்கினம். அவையில ஒராளை நெடுந்தீவுக்கு அனுப்பினால் அவருக்கு வேலை கிடைச்சதாவும் இருக்கும், அங்கத்தை சனத்துக்கு நல்லது செய்ததாவும் இருக்கும். ஆனால் ஆயுள்வேத டாக்குத்தர் இடமாற்றத்தில போனபிறகு, நெடுந்தீவுச் சனம் குழம்பியடிச்சு, இதுக்காக ஒரு ஆர்ப்பாட்டம் பண்ணினால் தாங்கள் அங்கத்தை கார்டரை மத்திய அரசாங்கத்துக்கு காட்ட மறந்த விசயம் லீக்காகி, தங்கட பதவிக்கு ஆப்பு வந்திடும் எண்ட பயத்திலதான் இப்பிடியொரு 'கூட்டுமுறை' லிஸ்ட்டை ரெடி பண்ணியிருக்கினமாம் மாகாண அதிகாரிமார்.

நிர்வாகத்தை ஒழுங்கா நடத்த முடியாதவை மேலிடங்களில இருந்தால் இப்பிடிக் கூட்டுமுறை லிஸ்ட் மாதிரியான விளையாட்டுகள் நடக்கத்தான் செய்யும். இப்பிடிக் கூட்டுமுறை லிஸ்ட் போட்டதோட அதிகாரிமாரின்ர வேலை முடிஞ்சுது. ஆனால் சனத்துக்கும், உந்த லிஸ்ட்டில உள்ள டாக்குத்தர்மாருக்கும் தானே திண்டாட்டம். ஏனெண்டால் வள்ளுவர் சொன்னமாதிரி வருத்தம் வந்தால் அதுக்கு என்ன மூலகாரணம் எண்டு உடன கண்டுபிடிக்க முடியாது. அதுவும் ஆயுள்வேதத்தில மெல்ல மெல்ல ஒவ்வொரு குளிசையாக் குடுத்து, நாடி பார்த்து, ஆளின்ர சுகநலன் பார்த்துத் தான் வைத்தியம் செய்யமுடியும். ஆனால் இந்த சுதேச திணைக்களத்தின்ர கூட்டுமுறை லிஸ்ட்டின்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு டாக்குத்தர் போனால், ஒவ்வொரு நாளும் அந்த டாக்குத்தரிட்ட போய் புதிசா தனக்கு என்ன வருத்தம் எண்டு நோயாளிமார் முதலில இருந்து சொல்லவேணும். டாக்குத்தராலையும் அந்த ஒருநாளில வருத்தக்காரரின்ர நோயைப் பற்றி முழுசா தெரிஞ்சு கொள்ள ஏலாது. பிறகு அடுத்த நாள் இன்னொரு டாக்குத்தரிட்டையும் போய் இப்பிடி வருத்தக்காரர் தன்ர நோயைப்பற்றி முதல்ல இருந்து சொல்லித்தான் மருந்து எடுக்கோணும். என்னதான் முந்திப் பார்த்த டாக்குத்தர் வருத்தம் பற்றி எழுதின துண்டு இருந்தாலும், அதைமட்டும் வைச்சுக்கொண்டு வைத்தியம் பாக்க முடியாது. அதை விட தமிழ் வைத்தியத்தில தனிய குளிசை, எண்ணெய் குடுக்கிறதோட பத்தியமும் பாப்பினம். இதெல்லாம் 'ஒரு நாள் டாக்குத்தர்' முறையால செய்யமுடியாது. சும்மா ஒரு சாட்டுக் குத்தான் அங்க ஆயுள்வேத டாக்குத்தர்மார் இருப்பினமே தவிர ஒரு வருத்தமும் தீராது.

அதோட இன்னொரு விசயமும் இருக்குது. எப்பவுமே ஆயுள்வேத டாக்குத்தர் எண்டால் எங்கட அதிகாரிமாருக்கு இளக்காரம் தான். இதே ஒரு இங்கிலிஷ் மருத்துவம் பாக்கிற டாக்குத்தர்மாருக்கு இப்பிடி 'கூட்டுமுறை' லிஸ்ட் போட்டு 'நாளுக்கொரு ஆள்' எண்டு நெடுந்தீவுக்கு அதிகாரிமார் அனுப்புவினமோ? இல்லைத்தானே. 'ஆயுள்வேத டாக்குத்தர் எண்டால் ஏதோ கண்ணைமூடிக்கொண்டு கிரந்தி எண்ணெயையும், கோறோசனையையும் குடுக்கிற ஆக்கள் தானே, அதுக்கு இப்பிடி கூட்டுமுறை லிஸ்ட் போட்டு அனுப்பினாலும் போகத்தானே வேணும்' எண்ட இளக்காரச் சிந்தனைதான் இப்பிடியெல்லாம் செய்யவைக்குது. இந்த விசயத்தை உரியவை வடிவா ஆராய்ஞ்சு, நெடுந்தீவுக்கு நிரந்தரமா ஒரு ஆயுள்வேத டாக்குத்தரை போடவேணும். அதோட தாங்கள் விட்ட பிழையை மறைக்க இப்பிடி கூட்டுமுறை லிஸ்ட் போட்டவையைக் கண்டுபிடிச்சு அவைக்கும் உரிய நடவடிக்கை எடுக்கோணும். ஆனால் இஞ்ச அப்பிடி நடவடிக்கை எடுக்கிற வல்லமையுள்ளவை ஆர் இருக்கினம்?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 2
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணபடனத்தொடரின் 55ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாசமண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர், திருவாசகப்பிரியன், பொன்.சந்திரவேலின் 'அயிராணிசோகப் படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறும். சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப்பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

★★★★

யாழ்ப்பாணம், ஜூன் 2
சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக வாராந்தத் திருமந்திரச் சிறப்புச்சொற்பொழிவுத்தொடர்-8 தெல்லிப்பழை மாவைக்கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.
சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் நிகழ்வில் திருமூல நாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், திருவாசகப்பிரியன் அருள்மொழி வாருதி க. கயிலைவாசனின் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் திருமந்திரம்' எனும் தலைப்பில் சொற்பொழிவும் இடம்பெறும்.
சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

உயர் பாதுகாப்பு வலய

# பலாலி வீதி போக்குவரத்து பயன்பாட்டு நேரம் நீடிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 2
பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினூடாகச் செல்லும் வயாவிளான் சந்தியிலிருந்து பலாலிக் கடற்கரைச் சந்தி வரையான பலாலி வீதி ஊடான போக்குவரத்து தற்போது தினமும் காலை 6 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மக்கள் பயன்பாட்டுக்காக நீடிக்கப்பட்டுள்ளது. பலாலி வீதியில் சுமார் 2.5 கிலோ மீற்றர் நீளமான வீதி உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்கிறது. குறித்த பகுதியைக் கடந்த ஆண்டு நேரக் கட்டுப்பாட்டுடன் இராணுவத்தினர் போக்குவரத்துக்கு அனுமதித்தனர்.
இந்தநிலையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற காணி விடுவிப்புத் தொடர்பிலான விசேட கலந்துரையாடலின்போது குறித்த வீதியை 24 மணி நேரப் போக்குவரத்துக்கு அனுமதிக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் கோரிக்கையை முன்வைத்தார். அதற்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர். அழுத்தமான கோரிக்கைகளைத் தொடர்ந்து மேலுமொரு மணிநேரம் வீதியைத் திறந்துவிட இராணுவத்தினர் சம்மதித்தனர்.
இதுவரை காலமும் காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்து விடப்பட்ட வீதியினை வெசாக் தினம் முதல் நீடித்து இரவு 9 மணி வரை போக்குவரத்து மேற்கொள்ள இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர். (ச-66)



# பொலிஸார் துரத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் விபத்து!

ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணத்தில் பொலிஸார் துரத்திவந்த மோட்டார் சைக்கிள் வீதியில் பயணித்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை நிறுத்த முற்பட்டுள்ளனர். எனினும், அந்த நபர் பொலிஸாரின் கட்டளையை மீறி அதிவேகமாகத் தப்பியோடியுள்ளார். இதனையடுத்து பொலிஸாரும் அவரைத் தங்களது மோட்டார் சைக்கிள்களில் துரத்திச்சென்றுள்ளனர். யாழ்ப்பாணம் மவுண்ட் ஹாமல் வீதி சந்தியடியில், பொலிஸார் துரத்திவந்த மோட்டார் சைக்கிள் வேறொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த நபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். துரத்திவந்த நபரைக் கைது செய்ததுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# சிறுவர் துஷ்பிரயோக குற்றவாளிகளுக்கு சட்டத்தரணிகள் ஆதரவளிக்கக்கூடாது

## பெண்கள் நிதியப்பணிப்பாளர் வலியுறுத்து

மன்னார், ஜூன் 2
வன்முறைகளால் பாதிக்கப்படும் சிறுவர்களுக்கு எதிராக, குற்றவாளிகளுக்கு ஆதரவளித்து, சட்டத்தரணிகள் வாதிடக்கூடாது என்று புத்தளம் முஸ்லீம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் யுவைதியாக முகைதீன் தெரிவித்தார். மன்னாரில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு எதிரான போராட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- அநுராதபுரம் சிறுமி மீதான வன்முறைக்கு எதிராக, அனைவரும் குரல் கொடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட மதகுருவுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும். 2018 - 2022 வரையான காலப்பகுதியில் 488 சிறுவர்கள் தேரர்கள் மூலமாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவற்றைவிட அறியப்படாத சம்பவங்கள் இன்னும் பதிவாகியிருக்கலாம். இந்த விடயத்தில் நீதி கிடைக்கவேண்டும். குற்றவாளிகளுக்குச் சாதகமாகவும், பாதிப்புகளுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு எதிராக வழக்காடும் சட்டத்தரணிகளுக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்க வேண்டும். எனவே நாட்டில் எந்த இடங்களாக இருந்தாலும், சட்டத்தரணிகள் சிறுவர், பெண்கள் துஷ்பிரயோக வழக்கில் குற்றவாளிகளுக்காக வாதிடக் கூடாது-என்றார். (க-60)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்று வருவீர்கள்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உற்சாகமான நாளாக அமையும். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வாழ்க்கைத் துணையால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## மாற்றமும் ஏமாற்றமும்!

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் நீதித்துறை என்பது மிக முக்கியமானதும், சாமானிய மக்களின் கடைசிப் புகலிடமுமாகும். அத்தகைய நீதித் துறையின் செயற்பாடுகளில் நிர்வாகத்துறையோ அல்லது ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளோ தலையிடுவது என்பது, ஒரு நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பையே வேரோடு சிதைக்கும் பேராபத்தாகும். யாழ்ப்பாண உயர்நீதிமன்ற நீதிபதியாக ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா, பதவியேற்ற ஒரு மாத காலத்திற்குள் திடீரென பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது, இலங்கை நீதித்துறையின் சுதந்திரம் குறித்துப் பாரிய ஐயப்பாடுகளை எழுப்பியுள்ளது. யாழ்ப்பாணச் சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளபடி, இந்த இடமாற்றத்திற்குப் பின்னால் வடக்கு மாகாண ஆளுநரின் அரசியல் தலையீடு இருப்பதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு சாதாரணமானதல்ல.

நீதித்துறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவதற்கான அதிகாரம் நீதிச்சேவை ஆணைக் குழுவுக்கு உண்டு என்பதை எவரும் மறுக்கவில்லை. ஆனால், வட மாகாண ஆளுநருக்கு எதிராகச் சில உத்தரவுகளைப் பிறப்பித்த ஒரே காரணத்துக்காக, அந்த உத்தரவுகளால் ஆத்திரமடைந்த நிர்வாகத் தரப்பு, அரசாங்கத்தின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு நீதிபதியை இடமாற்றம் செய்ய முனைவது அப்பட்டமான அதிகார அத்துமீறலாகும். நீதித்துறையின் செயற்பாடுகளில் அரசியல் தலையீடு இருப்பதாகச் 'சிறிதளவு தோற்றமளிப்பதுகூட' அந்தத் துறையின் மீதான மக்களின் நம்பிக்கையை முற்றாக அழித்துவிடும். ஒரு நீதிபதி சுதந்திரமாகத் தீர்ப்பு வழங்கமுடியாத சூழல் நிலவினால், அங்கு சட்டத்தின் ஆட்சி மறைந்து, தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட சர்வதிகார ஆட்சியே தலைதூக்கும்.

புதிய அரசாங்கம் 'நீதியான மற்றும் ஊழலற்ற நாட்டை' உருவாக்கப்போவதாக வாக்குறுதி அளித்தே ஆட்சிக்கட்டிலில் அமர்ந்துள்ளது. இத்தகையதொரு சூழலில், நிர்வாகத்துறையினரின் தனிப்பட்ட 'ஈகோக்களுக்காகவும்' அரசியல் லாபங்களுக்காகவும் நீதித்துறையைப் பகடைக்காயாகப் பயன்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இத்தகைய தலையீடுகளுக்குத் தனது அரசாங்கத்தில் எவ்வித சகிப்புத்தன்மையும் இருக்காது என்பதைச் செயலில் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். சட்டத்தரணிகள் சங்கத்தின் குற்றச்சாட்டுகளைப் பாராமுகமாகத் தட்டிக் கழிப்பது, அரசாங்கத்தின் நற்பெயருக்கே பெரும் களங்கத்தை ஏற்படுத்தும்.

நீதிமன்றங்கள் என்பவை ஆட்சியாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் அலுவலகங்கள் அல்ல; அவை சட்டத்தின் மேலாண்மையைப் பாதுகாக்கும் அரண்கள். அந்த அரண்களுக்குள் நிர்வாகத்துறையின் நிழல் படியத் தொடங்கினால், அது ஜனநாயகத்தின் அந்திமக் காலத்தின் தொடக்கமாகவே அமையும். எனவே, நீதிபதி அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றம் தொடர்பான பின்னணிகளை ஜனாதிபதி வெளிப்படைத் தன்மையுடன் விசாரிக்கவேண்டும். நீதித்துறை சுதந்திரமாகவும், எவ்வித அரசியல் அச்சுறுத்தல்களுமின்றியும் செயற்படுவதை உறுதிசெய்வதே நாட்டுக்கும், மக்களுக்கும், நீண்டகால அடிப்படையில் அரசாங்கத்திற்கும் நன்மை பயக்கும். இல்லையேல், மாற்றம் என்பது வெறும் வார்த்தையாக மட்டுமே நிலைத்து ஏமாற்றமே எஞ்சிவிடும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com







### பொய்யாமொழி

**ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

**பொருள்:** ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படும்.



## கியூ.ஆர். முறைமை இறுக்கமாக்கப்படும்



வலுசக்தி அமைச்சர் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 2

**நாட்டில் எரிபொருள் விநியோகத்துக்காகத் தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். குறியீட்டு ஒதுக்கீட்டு முறைமை எந்தவொரு காரணத்துக்காகவும் நீக்கப்பட மாட்டாது.**

எதிர்காலத்தில் மேலும் இறுக்கமாகக் கண்காணிக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் என்று வலுசக்தி அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார். உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை மற்றும் உள்நாட்டில் எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ள சூழலில், இந்த கியூ.ஆர். கட்டுப்பாட்டு முறைமை தொடர்வது பொருளாதார ரீதியாகப் பாரிய பலனைத் தந்துள்ளது. எதிர்காலத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டு அளவை மாத்திரம் சற்று அதிகரிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## 399 பேர் கைது

கொழும்பு, ஜூன் 2

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புக்களில் 399 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.


கைது செய்யப்பட்டவர்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 191 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 88 பேரும் அடங்குகின்றனர். மதுபோதையில் வாகனம் செலுத்திய 32 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 98 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## சாதனை படைத்த திருமலை துறைமுகம்

திருகோணமலை, ஜூன் 2

திருகோணமலை துறைமுக வரலாற்றில் முதன்முறையாக, கடந்த மே மாதம் 29ஆம் திகதி அஷ்ரப் கப்பல்துறையில் ஒரே நேரத்தில் மூன்று சரக்குக்கப்பல்கள் நங்கூரமிட்டு, தமது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் திருகோணமலை இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் வதிவிட முகாமையாளர் சரத் குமார விடுத்துள்ள அறிக்கையில் திருகோணமலை துறைமுகத்திற்கு ஒரே நேரத்தில் மூன்று கப்பல்கள் வந்து, நங்கூரமிட்டு, இவ்வாறான உத்தியோகபூர்வ சரக்குக் கையாளல் நடவடிக்கைகளை ஒரே காலப்பகுதியில் முன்னெடுத்தமை இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)





## மெட்ரோ பேருந்துகளுக்கு ஜி.பி.எஸ். கண்காணிப்பு!

கொழும்பு, ஜூன் 2

பயணிகள் தற்போது 'LMT GO' எனும் மொபைல் செயலி மூலம் மெட்ரோ பேருந்துகளின் நிகழ்நேர இருப்பிடங்களையும் வருகை நேரங்களையும் கண்காணிக்க முடியும் என்று போக்குவரத்துப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். ஜி.பி.எஸ். வசதியுடன் கூடிய இந்தச் சேவை, பேருந்துகள் தங்கள் நிறுத்தங்களுக்கு எப்போது வரும் என்பதைச் சரிபார்க்கவும், இயக்கப்படும் பேருந்து மற்றும் கட்டண விவரங்களைக் காணவும், வரவிருக்கும் இடங்களுக்கான உத்தேச பயண நேரங்களைக் கண்காணிக்கவும் பயணிகளுக்கு உதவுகிறது.

இந்தப் புதிய சேவையைப் பயன்படுத்திக்கொள்ள, பயணிகள் 'LMT GO' செயலியைப் பதிவிறக்கம் செய்யுமாறும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை

புதன்கிழமை- வைகாசி 20

03.06.2026

சுபநேரம் : 04.22 – 05.52

ராகுகாலம் : 11.52 – 01.22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# எரிபொருள் விலையேற்றம் கட்டணங்களை உயர்த்துக!

## வாகனச் சங்கங்கள் கோரிக்கை

**கொழும்பு, ஜுன் 2**
**எரிபொருள் விலையேற்றத்துக்கமைய முச்சக்கரவண்டிச் சேவை, பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை மற்றும் பேருந்துச் சேவைக் கட்டணத்தை உயர்ந்துமாறு தொழிற்சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அரசாங்கம் சர்வதேச நாண நிதியத்தின் தீர்மானத்துக்கு அமைவாகவே செயற்படுகிறது. ஒவ்வொரு மாதமும் எரிபொருள் கட்டணம் உயர்வடைவதால் சேவைக் கட்டணத்தை தீர்மானிக்க முடியாத நிலை காணப்படுகிறது. தற்போதைய எரிபொருள் விலையேற்றத்துக்கமைய முதல் கிலோமீற்றர் தூரத்துக்கான கட்டணத்தை 130 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் ரோஹன பெரேரா தெரிவித்துள்ளது. அதேவேளை எரிபொருள் கட்டணம் ஒவ்வொரு மாதமும் உயர்வடைகின்ற நிலையில் எமது சேவை கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது அரசாங்கம் நிவாரமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். இருப்பினும் இதுவரையில் அதற்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

தற்போதைய விலையேற்றத்துக்கமைய சேவை கட்டணத்தை கட்டாயம் அதிகரிக்க வேண்டும் என பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவைச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் விலையைக் குறைக்க வேண்டும் அல்லது எமக்கு நிவாரணமளிக்க வேண்டும். இல்லையேல் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என ஒன்றிணைந்த போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் சம்பத் ரணவீர தெரிவித்துள்ளார். (ச-இ)

# இவ்வாண்டின் 5 மாதங்களுக்குள் 6 முறை எரிபொருள் விலையுயர்வு

## முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவிப்பு!

கொழும்பு, ஜுன் 2
இலங்கையில் இந்த ஆண்டில் மட்டும் 6 தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. தரம் குறைந்த நிலக்கரி மோசடியினால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்யவே மக்கள் மீது இந்தச் சுமை திணிக்கப்பட்டுள்ளது என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.
அவர் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது என்றும், ஜுலை 31 வரை போதிய கையிருப்பு உள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்து 100 மணித்தியாலங்கள் கூட நிறைவடையவில்லை. அதற்குள் விலையை உயர்த்தியுள்ளனர். தற்போதைய அரசாங்கம் மக்களை ஏமாற்றி அதீத இலாபம் ஈட்ட முனைகிறது. இந்த 2026ஆம் ஆண்டில் மட்டும் இதுவரை ஜனவரி 6, மார்ச் 1, மார்ச் 10, மார்ச் 22, மே 2 மற்றும் மே 30 ஆகிய திகதிகளில் 6 முறை விலை உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆறு தடவைகளில் ஜனவரி மாதம் இருந்த விலையை விட, 92 ரக பெற்றோல் 140 ரூபாவாலும், 95 ரக பெற்றோல் 160 ரூபாவாலும், டீசல் 130 ரூபாவாலும், சுப்பர் டீசல் 160 ரூபாவாலும், மண்ணெண்ணெய் 105 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.
2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் எரிபொருள் கொள்வனவுக்காகச் செலவிடப்பட்ட தொகை பெரும் சந்தேகத்தை எழுப்புகிறது.
பொருளாதார நெருக்கடி உச்சத்திலிருந்த 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை 116 டொலராலும், டொலரின் மதிப்பு 30 ரூபாவாலும் குறைந்துள்ளது. அப்படியிருந்தும், 2022 மே மாதத்தை விட தற்போது மண்ணெண்ணெய் விலை 198 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது ஏன்? நிலக்கரி மோசடியாளர்களின் சுமையை மக்கள் மீது சுமத்தக்கூடாது- என்றார். (ச-இ)

# ஏறி இறங்கும் தங்கவிலை

கொழும்பு, மே 2
தங்கத்தின் விலை நேற்று ஆயிரம் ரூபாவால் அதிகரித்தது என்று அகில இலங்கை நகையக வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
கடந்த 29 ஆம் திகதி 24 கரட் தங்கம் ஒரு பவுண் 387,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில் நேற்று 388,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.
22 கரட் தங்கம் பவுண் ஒன்று 356,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில் , ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 357,000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. (எ-இ)



# ஆசிரியர் போட்டிப் பரீட்சையூடாக அரசுக்கு 44 கோடி ரூபா இலாபம்!

## தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 2
அரசாங்கப் பாடசாலைகளுக்கு 23,000 ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட ஆசிரியர் போட்டிப் பரீட்சை மூலம் அரசாங்கம் பரீட்சார்த்திகளிடமிருந்து சுமார் 44 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை இலாபமாக ஈட்டியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்த முறை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளிடம் இருந்து பரீட்சைக் கட்டணமாக சுமார் 2,700 ரூபா வசூலிக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் உட்பட ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர். இதன்மூலம் பரீட்சைக் கட்டணமாக மட்டும் மொத்தம் 44 கோடி 21 இலட்சத்துக்கும் அதிக தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர்களில் 23,000 பேர் என்ற வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரே ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
கடந்த காலங்களில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் ஒரே மாதிரியான வினாத்தாள்கள் வழங்கப்பட்டன.
ஆனால் இம்முறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒரு வினாத்தாள்களும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேறொரு வினாத்தாளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வினாத்தாள்கள் தயாரிப்பில் அரசாங்கம் சமநிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளது. - என்றார். (ச-இ)

# சுரேஷ் சலேவுக்கு சிறையில் கொடூரமான சித்திரவதைகள்

## மனைவி ஜனாதிபதிக்கு முறையீடு!

கொழும்பு, ஜுன் 2
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் 80 நாள்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்படுவதாக அவரது மனைவி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.
சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி அபேசேகர தனிப்பட்ட பழிவாங்கலின் காரணமாகவே தனது கணவரைப் பலிக்கடாவாக்குகிறார் எனத் தெரிவித்துள்ள அவர், கணவனின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.
அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
சுரேஷ் சலே வெறும் 6.5 அடிக்கு 4.4 அடி அளவுள்ள எலிகள் நிறைந்த மிகச் சிறிய அறையில் அடைக்கப்பட்டுள்ளார். எலி கடித்துவிடுமோ என்ற பயத்தால் அவர் இரவில் தூங்குவதில்லை. காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே அவர் கழிவறையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்.
தடுத்து வைக்கப்பட்ட சில நாள்களுக்குப் பிறகு, மாலை வேளையில் அதிகாரிகள் குழுவினர் சலேவின் அறைக்குள் நுழைந்து, பிற கைதிகள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் அவரை வலுக்கட்டாயமாக நிர்வாணப்படுத்தி, விலங்கிட்டு, அநாகரீகமாகத் துன்புறுத்தியுள்ளனர்.
கடந்த 80 நாள்களில் அவர் மிகக்குறைந்த தடவைகளே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது அவரைப் பழிவாங்க மட்டுமே அடைத்து வைத்துள்ளனர் என்பதைக் காட்டுகிறது.
கடந்த ஏப்ரல் 22 அன்று கோட்டை நீதவான் சலேவை உடனடியாகச் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டும், சி.ஐ.டி.யினர் 10 நாள்களுக்கு மேல் அதனை நிறைவேற்றத் தவறியுள்ளனர்.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் கீழ் இந்த அநீதி நடப்பது வருத்தமளிக்கின்றது- என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**எளிமையான வாழ்க்கைதான் ஒருவரை வலிமையாக வாழவைக்கும் என்ற வரிகளுக்கு ஏற்ப எப்போதும் எளிமையை விரும்பும் ரிஷப ராசிக்காரர்களே!**

குரு பகவான், ஜூன் 02 முதல் உங்கள் ராசிக்கு, 3ஆம் இடத்தில் அமர்ந்து பலன் தரப்போகிறார். இதுவரை உங்களின் அடிமனதிலிருந்த பதற்றம், பயம், மனக்குழப்பங்கள் நீங்கி தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். முக்கியமான வேலைகளை நீங்களே முன்னின்று முடித்தால் வெற்றி கிட்டும். சகோதர, சகோதரிகளிடையே சின்னச் சின்ன கருத்துமோதல்கள் வரலாம். பாகப் பிரிவினையில் நடுநிலையாக செயற்படுங்கள். குடும்பத்தில் உள்ளவர்களிடம் விட்டுக் கொடுத்துப் போகப் பாருங்கள். பெரியவர்களின் ஆலோசனைகளை ஏற்பது நல்லது. எந்தவொரு விஷயத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து முடிவெடுங்கள். நெடுங்கால நண்பர்களாக இருந்தாலும் குடும்ப ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். அவ்வப்போது வரும் முன்கோபத்தை குறை யுங்கள்.

**குரு பகவான் பார்வை பலன்கள்:**

குரு பகவான் உங்கள் ராசிக்கு 7ம் இடத்தைப் பார்ப்பதால், மறைந் திருந்த திறமைகள் வெளிப்படும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன சண்டை சர்ச்சைகள் வந்து போனாலும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள், கணவன் மனைவிக்குள் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். குரு பகவான் 9ஆம் இடத்தைப் பார்ப்பதால், பூர்வீகச் சொத்து கைக்கு வரும். தந்தையுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் விலகும். திடீர்ப் பணவரவால் பழைய கடனை பைசல் செய்வீர்கள். மகளின் திருமணத்தை கோலாகலமாக நடத்துவீர்கள். சிலர் விலையுயர்ந்த ஆபரணங்கள் வாங்குவார்கள். குரு பகவான் லாபஸ்தானமாகிய 11ம் இடத்தைப் பார்ப்பதால், சொந்த ஊரில் செல்வாக்கு உயரும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். வற்றிய பணப்பை நிரம்பும். சொத்துப் பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். மூத்த சகோதர, சகோதரிகளால் ஆதாயமுண்டு. வாகனத்தை இயக்கும்போது கவனம் தேவை.

**தைரியம் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் வெற்றி மற்றும் சொத்து சேர்க்கை உண்டாகும்.**

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

உங்களின் அஷ்டம லாபாதியான குருபகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் திடீர் செலவுகள், வீண் அலைச்சல் அதிகரிக்கும். பிள்ளை களால் மகிழ்ச்சியுண்டு. அவர்களின் விருப்பத்தை நிறைவேற்று வீர்கள். பாக்ய ஜீவனாதிபதியுமான சனி பகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் திடீர் யோகம் உண்டாகும். குடும்பத்தில் அடுத் தடுத்து சுபகாரியங்கள் நடக்கும். மனக் குழப்பங்கள் விலகும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். புது சொத்து, வாகனம் வாங்குவீர்கள்.

தன பூர்வ புண்யாதிபதியுமான புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல் 31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குரு பகவான் பயணம் செய்வதால் வீடு, மனை வாங்குவீர்கள். கோயில் நிகழ்ச்சிகளை தலைமை தாங்கி நடத்துவீர்கள். வழக்குகள் வெற்றியடையும்.

கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குரு பகவான் செல்வதால் விரயச் செலவுகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. திட்டமிட்ட வேலையை அலைந்து திரிந்து முடிப்பீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வரும்.

ஆன்மிகப் பயணங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் திடீர் இலாபங்களால் திக்குமுக்காடுவீர்கள். போட்டிகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு களை தவிடு பொடியாக்குவீர்கள். புது பொறுப்புகள் தேடி வரும்.

இந்த குருப் பெயர்ச்சி புத்துணர்ச்சியுடன் செயற்படும் காலமாக அமையும்.

## மதத்தின் போர்வைக்குள் குற்றம் மறைப்பதற்கு இடமளிக்கக்கூடாது!

### ஜாட்சன் பிகிராடோ தெரிவிப்பு



மன்னார், ஜூன் 2

சட்டத்தின் பிரகாரம் குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். எனவே மதம் என்ற போர்வைக்குள் குற்றம் இழைத்தவரைப் பாதுகாக்க இடமளிக்க முடியாது என்று மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனப் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் சிறுமி ஒருவர் பௌத்த மதகுருவால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியதைக் கண்டித்து, மன்னாரில் இடம்பெற்ற கண்டண பேரணியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சட்டதிட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்கின்றன. பயிரைக் காக்க வேண்டிய வேலியே பயிரை மேயும்போது, அதனைப் பார்த்துக் கொண்டு இருக்கமுடியாது. சட்டங்களும் கண்ணை மூடிக்கொண்டு இருக்க முடியாது. இந்த நாடு ஒவ்வொரு குடிமகனுக்கும் சொந்தம். இங்குள்ள சட்டதிட்டங்களும் ஒவ்வொருவருக்கும் பொருத்தமானது. எவரும் உயர்ந்தவர்களும் அல்ல, தாழ்ந்தவர்களும் அல்ல, ஒவ்வொருவரும் சட்டத்திட்டங்களுக்குச் சமமானவர்கள். எனவே அநுராதபுரம் சிறுமிக்கு நீதி கிடைக்கவேண்டும். இதற்காக அரசு அரசு சார்பற்ற கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்-என்றார். (க-60)

## சிறுவர், பெண்கள் வன்முறைகளைத் தடுக்க இறுக்கமான சட்ட நடவடிக்கைகள் அவசியம்

### *மாதர் ஒன்றிய இணைப்பாளர் வலியுறுத்து!*

மன்னார், ஜூன் 2

நாட்டில் சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகளை இல்லாதொழிக்க இறுக்கமான சட்ட நடவடிக்கைகள் அவசியம் என்று மன்னார் மாதர் ஒன்றியத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் மகாலட்சுமி நாகசுந்தரம் வலியுறுயுள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற போராட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் முழு நாட்டையும் பாதிக்கும். எனவே இந்த விடயத்தில் கூட்டாகச் செயற்படவேண்டும்.

நீதித்துறை எவ்வளவுக்கு எவ்வளவு துரிதமாகப் பணியாற்றுகின்றதோ, இறுக்கமான சட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றதோ அப்போது தான், பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் எதிராக நடைபெறும் அநீதிகளைக் குறைக்கமுடியும்.



இறுக்கமான சட்டதிட்டங்கள் இல்லாமை அல்லது சட்டங்களை சரியான முறையில் கையாளமை போன்ற காரணங்களாலேயே வன்முறைகள் அதிகரிக்கின்றன-என்றார். (க-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெலாரஸின் 'பெலாவியா' விமானசேவை இலங்கைக்கு

கொழும்பு,ஜூன் 2

பெலாரஸ் நாட்டின் தேசிய விமானசேவை நிறுவனமான 'பெலவியா' இலங்கைக்கான தனது நேரடி விமானச் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி முதல் இந்த விசேட விமானசேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த விமானசேவைகள் வாரம் ஒருமுறை செவ்வாய்க்கிழமைகளில் அதிநவீன விமானங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ளன.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 12:50 மணிக்கு பெலாரஸ் நாட்டின் மினஸ்க் நகரிலிருந்து புறப்படும் விமானம், அன்றைய தினம் மதியம் 12:40 மணிக்கு இலங்கையின் மத்தள சர்வதேச விமானநிலையத்தை வந்தடையும்.

மறுமார்க்கமாக, அன்றைய தினம் பிற்பகல் 2:40 மணிக்கு மத்தள விமானநிலையத்திலிருந்து புறப்படும் விமானம், அதேநாள் இரவு 10:10 மணிக்கு மினஸ்க் நகரைச் சென்றடையும். (ச-இ)



# இந்தியப் பாடகி சிவாஜிக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜூன் 2

இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்தியத் தொலைக்காட்சியால் பிரபல்யமான, பின்னணிப் பாடகியான பவித்திரா, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கத்தைச் சந்தித்து, தன்னால் இயன்ற உதவியை வழங்கியுள்ளார். தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் நினைவுத் தூபிக்குச் சென்று மலர் தூவி, போரின் போது உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தினார். (க-19)

# சினோபெக், லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 2

சினோபெக் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகிய நிறுவனங்களும் தங்களது எரிபொருள் விலைகளை கடந்த சனிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரித்துள்ளன. முன்னதாக, அனைத்து வகையான எரிபொருள்களினதும் விலைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதிகரித்திருந்த நிலையில் அதனைப் பின்பற்றி ஏனைய இரு நிறுவனங்களும் இந்த விலை அதிகரிப்பை அறிவித்துள்ளன.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி. மற்றும் சினோபெக் நிறுவனங்களும் இந்த விலை அதிகரிப்பை நடைமுறைப்படுத்தியுள்ள போதிலும், சினோபெக் நிறுவனம் சுப்பர் டீசல் விலையில் மாத்திரம் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை. (ச-இ)

# அறநெறி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழாவை முன்னிட்டு, அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில், அதன் செயலாளர் பரா.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆலயச் சுற்றாடலைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-17)


## UDUVIL GIRLS' COLLEGE

**2027 ம் ஆண்டிற்கான அனுமதி - தரம் - 1**

உடுவில் மகளிர் கல்லூரியில் தரம் - 1 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை 02.06.2026 - 30.06.2026 காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

இடம் : உடுவில் மகளிர் கல்லூரி காரியாலயம்

நேரம் : காலை 8.00 - பிற்பகல் 2.30

அதிபர்

CR/47625) J-1


# மரண அறிவித்தல்

மலர்வு 04 . 11 . 1945



உதிர்வு 31 . 05 . 2026

## திரு. பாலானந்தம் சிவானந்தன்

தும்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலானந்தம் சிவானந்தன் அவர்கள் கடந்த (31.05.2026) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலானந்தம் - ரங்கநாயகி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - செல்வரத்தினம் தம்பதியரின் மருமகனும், சி.றதிதேவி அவர்களின் அன்புக் கணவரும், சிவறூபன், சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வசந்தாதேவி, சச்சிதானந்தன், காலஞ்சென்ற பரமானந்தன், சதானந்தன், காலஞ்சென்ற சகுந்தலாதேவி, பத்மாதேவி, நித்தியானந்தன், லலிதாதேவி, சசிகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெகதர்சினி, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், துஜீவ், அக்ஷிதா, கவிநயா, டிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2026) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 467 2492

(CS/31917) J-1

## INVITATION FOR BIDS
## MANTHAI EAST PRADESHIYA SABHA - PANDIYANKULAM

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB) but limited to the bidders who registered under Northern Province.
3. Qualification requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| S/N o | Bid ID | Document Issuing/Purchasing Period | | | From 03.06.2026 until 16.06.2026 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 09.06.2026 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 17.06.2026 | | | | | |
| | | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | PSDG/NP/MU/MEPS/2026/OS/01 | Construction of Shopping Complex at Karumpullijan | PSDG Fund | 3.38 | 63 | C7 or above (Building) | 3,000.00 | 04.08.2026 | 50,700.00 | 01.09.2026 |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal (T.P: 021 228 4434, e.mail: psmanthaieast@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) S/No from 01 to 04 must be delivered to the Chairman, Manthai East and Bids (Original & Duplicate) S/No from 05 to 07 must be delivered to the Chairman, Divisional Procurement Committee, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam on or before 10.30 A.M as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, Manthai East Pradeshiya Sabha, Pandiyankulam, Naddankandal commencing at 10.30 AM as stated in table above.
8. All Bids must be accompanied by either Bid security as per the information given in the Tables.

Chairman
Divisional Procurement Committee,
Manthai East Pradeshiya Sabha,
Pandiyankulam, Naddankandal.

02.06.2026

(CR/47626) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனைச் சிதைக்க தயாராகின்றது ரஷ்யா!



## பதறுகின்றார் ஷெலன்ஸ்கி

கீவ், ஜூன் 2

**உக்ரைன் மீது மிகப்பெரும் தாக்குதலை நடத்துவதற்கு ரஷ்யா தயாராகி வருகின்றது. எனவே, ரஷ்யாவைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் அனைத்தும் ஓரணியில் இணையவேண்டும் இவ்வாறு உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உக்ரைன் மீது மிகப்பெரும் தாக்குதலை நடத்துவதற்கு ரஷ்யா திட்டமிட்டு வருகின்றது. உக்ரைனின் தலைநகர் கீவை சிதைப்பதே ரஷ்யாவின் சதித்திட்டமாக உள்ளது. ரஷ்யாவின் எதிர்காலநடவடிக்கைகள் தொடர்பில் எனக்குக் கிடைத்துள்ள உளவுத் தகவல்கள் மிகவும் ஆபத்தானவை. எனவே, உக்ரைனைப் பேரழிவு சூழ்வதற்கு முன்னர் உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து ரஷ்யாவைத் தடுத்து நிறுத்த வேண்டும். ரஷ்யாவை எதிர்கொள்வதற்கு அதிகளவான 'பேட்ரியாட்' வான் பாதுகாப்புச் சாதனங்களை அமெரிக்கா வழங்க வேண்டும்-என்றார். (ம)



# 70 வீதமான காஸாவை இஸ்ரேல் கைப்பற்றும்!

## நேதன்யாகு வெளிப்படை

டெல்அவிவ், ஜூன் 2

காஸாவின் 70 வீதமான நிலப்பரப்பை இஸ்ரேல் கைப்பற்றும், இஸ்ரேலின் இராணுவப் பாதுகாப்புக்கு அந்தப் பகுதி அவசியம் என்று இஸ்ரேலிய ப்பிரதமர் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கை விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. காஸாவில் 50 வீதமான பகுதியை இஸ்ரேல் கட்டுப்படுத்திய நிலையில் தற்போது 60 வீதமான பகுதிகள் எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதை 70 வீதமாக அதிகரிப்பதே எங்களின் நோக்கமாகும். ஏனெனில், எமது இராணுவப் பாதுகாப்புக்காக அந்தப் பகுதிகள் எமக்குத் தேவை-என்றார்.

எனினும் காஸாவை இஸ்ரேல் முற்றாகக் கைப்பற்ற வேண்டும் என்று இஸ்ரேலின் பொதுப்பாதுகாப்பு அமைச்சரும் தீவிர வலதுசாரித் தலைவருமான பென் கிவிர் வலியுறுத்தியுள்ளார். (ம)


# மரணப்பிடிக்குள் கொங்கோ: மருத்துவ அமைப்பு கவலை!



பிரெஸ்வில், ஜூன் 2

எபோலா வைரஸின் பரவல் காரணமாக கொங்கோ மரணப் பிடிக்குள் சிக்கியுள்ளது என்று சர்வதேச மருத்துவத் தொண்டு நிறுவனமான 'எல்லைகளற்ற மருத்துவர்கள்' என்ற அமைப்பு தனது கவலையை வெளியிட்டுள்ளது.

கொங்கோவில் பரவும் எபோலா வைரஸை உலகளாவிய நெருக்கடி நிலையாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. அத்துடன் ஒவ்வொரு வாரமும் கொங்கோவின் நிலைமை மிகவும் மோசமாகி வருகின்றது. இவ்வாறான நிலையிலேயே எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு கொங்கோ தொடர்பில் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது. கொங்கோவில் எபோலா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது. அத்துடன் 246 பேர் உயிரிழந்துள்ளனர். இது உத்தியோகபூர்வமான தகவல்கள்தான். உண்மையில் எபோலா தொற்றுக்களின் எண்ணிக்கை மேலும் அதிகளவு இருப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன என்று எல்லைகள் அற்ற மருத்துவர்கள் அமைப்பு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)



**விரிகின்றது போர்**

# ருமேனியாவை நேற்று குறிவைத்தது ரஷ்யா!

## புடின் மறுப்பு

மொஸ்கோ, ஜூன் 2

ருமேனியாவின் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மீது மர்ம ட்ரோன்கள் மோதியுள்ள நிலையில், அந்தத் தாக்குதலை ரஷ்யாவே நடத்தியதாக ருமேனியா குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைனுக்கு வெளியில் போரை விரிவாக்கம் செய்வதற்கு ரஷ்யா முயற்சிக்கின்றது. அதற்காகவே இந்தத் தாக்குதலை ரஷ்யப் படைகள் நடத்தியுள்ளன என்றும் ருமேனியப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

ருமேனியாவின் குற்றச்சாட்டுகளை ரஷ்ய அதிபர் புடின் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். ருமேனியாவில் மோதிய ட்ரோன் உக்ரைனிய ட்ரோனாகவும் இருக்கலாம். எனவே, ட்ரோனின் சிதைந்த பகுதிகளைத் தந்தால் அதுதொடர்பில் நாங்கள் விசாரணை நடத்துவோம் என்று புடின் மேலும் கூறியுள்ளார். (ம)


**ஈரானின் உச்சதலைவர்**

# அயதுல்லா அலி கமேனிக்கு பிரமாண்டமான இறுதிச்சடங்கு

தெகரோன், ஜூன் 2

இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்த ஈரானின் முன்னாள் உச்சதலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு பிரமாண்டமான இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுப்படைகள் நடத்திய வான் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். போர்க் காலத்தைக் கருத்திற்கொண்டு அவருக்கு ஒரேயொரு அஞ்சலி நிகழ்வு மட்டுமே நடத்தப்பட்டது. ஆதலால், மக்களின் கோரிக்கைக்கு அமைய தற்போது மிகப்பிரமாண்டமாக இறுதிச்சடங்கை நடத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம)



# அணுவாயுதத்தைக் கைவிடாவிடில் ஈரான் மீது மீண்டும் தாக்குதல்கள்!

## அமெரிக்கா மிரட்டல்

வொஷிங்டன், ஜூன் 2

அணுவாயுதத்தைக் கைவிடுவது தொடர்பான உத்தரவாதத்தை ஈரான் விரைவில் தரவேண்டும். இல்லையேல் மீண்டும் தாக்குதல்கள் நடத்தப்படும் இவ்வாறு அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் பீட் ஹெக்செத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் போர்நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. போரை நிறுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஈரான் வாக்குறுதி வழங்கியுள்ளது. ஆனால், போரை நிறுத்துவதும் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிப்பதும் ஈரானின் நடவடிக்கைகளில்தான் தங்கியுள்ளது. அணுவாயுதத்தைக் கைவிடுவது தொடர்பான உத்தரவாதத்தை ஈரான் இன்னமும் வழங்கவில்லை. அந்த உத்தரவாதத்தை வழங்காத பட்சத்தில் ஈரானுக்கு எதிராக நாங்கள் மிக விரைவில் இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்போம். எனவே, மீண்டும் போரா அல்லது இல்லையா என்பது ஈரானில் கைகளில்தான் உள்ளது-என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மெனிஞ்சைடிஸ், எபோலா தொற்று சுகாதாரப்பிரிவினர் தீவிரகவனம்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**

**உலகளவில் பரவி வரும் எபோலா வைரஸ் மற்றும் இலங்கையில் பரவி வரும் மெனிஞ்சைடிஸ் எனப்படும் மூளைக்காய்ச்சல் நோய் நிலைமைகள் தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர் என்று சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர்

நாட்டில் பரவி வரும் மெனிஞ்சைடிஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதற்காகப் பொதுமக்களின் ஒத்துழைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

எபோலா நோய் தொடர்பாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு விசேட கவனம் செலுத்தியுள்ளது. அதுதொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த நாள்களில் பதிவான மெனிஞ்சைடிஸ் நோய் கண்டறியப்பட்ட முதல் நாளிலிருந்தே கவனம் செலுத்தி, அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனால்தான், கடந்த நாள்களில் நடைபெற்ற தன்சல்களில் தேநீர் போன்ற சூடான பானங்களை வழங்குமாறு நாங்கள் கூறியிருந்தோம். நோய் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், எவரும் அலட்சியமாக இருந்துவிட வேண்டாம்-என்றார். (எ-இ)

# மீனவர்களைச் சாடி அரசியல் செய்யாதீர்

## ரஜீவன் எம்.பி.தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்.2

வடமராட்சியில் காணாமல் போயுள்ள மீனவர்களை மீட்பதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. எனவே இந்த விவகாரத்தை அரசியல் மயப்படுத்தவேண்டாம். மக்களின் சோகத்திலும், துன்பத்திலும் அரசியல் செய்ய வேண்டிய தேவை தேசிய மக்கள் சக்திக்கு இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெய்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பருத்தித்துறையில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நான்கு கடற்றொழிலாளர்கள் காணாமல் போனமை தொடர்பில், அவர்களின் குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்துள்ளோம். அவர்களைத் தேடும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. விமானப் படையினரின் உதவிகள் கேட்கப்பட்டுள்ளன. அத்துடன் கடற்படையினரின் உதவியுடன் தேடுதல் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காணாமல் போன நான்கு பேரின் உயிரும் மிகப் பெறுமதியானவை. அவர்களை உயிருடன் மீட்கவேண்டும் என்பதற்காகவே நாம் தீவிரமாக முயற்சித்து வருகின்றோம்.

மீனவர்கள் காணாமல் போன விடயம் தொடர்பில் ,கடற்றொழில் அமைச்சர் , உடனடியாகவே பாதுகாப்பு அமைச்சு ஊடாக கடற்படையினர் மற்றும் விமானப் படையினரின் உதவிகளை நாடி, தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் நீரியல் வளத் துறையினர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைத்து தரப்பினரும் தேடுதல் பணிக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சியில், எமது அரசாங்கத்தைக் குறைகூறுகின்றனர்–என்றார். (க)


# யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பு முன்னணியினரால் நினைவேந்தல்

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதன் 45ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

பொதுநூலக முன்றலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நிதிப் பொறுப்பாளர் தீபன் திலீசன் தலைமையில் நேற்றுமாலை 5 மணியளவில் இந்த நினைவேந்தல் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரியூட்டப்பட்டமையை அறிந்து பேரதிர்ச்சியால் உயிரிழந்த பேரறிஞர் தாவீது அடிகள் மற்றும் யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ்மக்களுக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் நினைவுச் சுடர்கள் ஏற்றி இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தினர். தொடர்ந்து கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மூத்த எழுத்தாளர் மு.ஈழத்தமிழ்மணி, கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பம் ஆகியோர் கலந்து கொண்டு நினைவுரைகள் நிகழ்த்தினர். (ம-66)





# இந்தியத் தூதரக அதிகாரியின் முதலாம் ஆண்டு நினைவு நாள்

யாழ்ப்பாணம்,ஜூன்.2

விபத்தில் உயிரிழந்த யாழ்.இந்தியத் துணைத் தூதரக அதிகாரியாகக் கடமையாற்றிய சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் மற்றும் அவரது மூத்த மகன் பிரபாகரன் அக்சய் ஆகியோரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை நிகழ்வு, நல்லூர் பண்டாரிக்குளம் மேற்கு வீதியிலுள்ள இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கட்டுநாயக்க ஊடாக யாழ்ப்பாணம் நோக்கிக் பயணித்த கார், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பருடன் நேருக்குநேர் மோதியதில் விபத்துக்குள்ளானது. இதில் காரைச் செலுத்திச் சென்ற சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரன் (வயது52) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காரில் பயணித்த அவரது மனைவியான யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சீதாலட்சுமி மற்றும் அவரது மூத்த மகன், மாமனார் ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்களில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மூத்த மகனும், மாமனாரும் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-66)



# தமிழ்மக்கள் கூட்டணியால் சிவாஜிலிங்கத்துக்கு உதவி

மூத்த தமிழ்த்தேசிய அரசியல் தலைவரும், வல்வெட்டித்துறை நகர பிதாவுமான சிவாஜிலிங்கத்தை தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்றுத் திங்கட்கிழமை நேரில் சந்தித்து அவரது தற்போதைய உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தனர். இதன்போது அவரது சிறுநீரக மாற்றுச் சிகிச்சையைக் கருத்திற்கொண்டு ஒருதொகை நிதியும் வழங்கி வைக்கப்பட்டது. (ம–66)

# வற்றாப்பளை அம்மனுக்கு நேற்று விசாகப் பொங்கல்

சாவகச்சேரி, ஜூன் 2

வரலாற்றுச் சிறப்புக் கொண்ட வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து நூற்றுக் கணக்கான பக்தர்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

(ம131)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## செம்மணிப்..

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் பகுதி நேற்று ஆரம்பமானது. இதன்போதே புதைகுழிக்குள் இருந்து மேலும் சில என்புத் தொகுதிகளும் தாயத்து போன்ற சான்றுப் பொருள் உட்பட மேலும் சில சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன. இன்றையதினம் அகழ்வுப் பணி தொடரவுள்ள நிலையில் மேலும் சில என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 262 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 260 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், 99 சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி எஸ். லெனின்குமார் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார், சட்டத்தரணி நிரஞ்சன் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றுள்ளனர். (அ-ம-26)

## யாழ்...

கள் நேற்றுக் காலை இடம்பெற்றன. யாழ்ப்பாணம் பொதுநூலகத்தினரின் ஏற்பாட்டில் நூலக மண்டபத்தில் யாழ். மாநகரசபையின் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜ் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பொது நூலகம் உருவாகுவதற்குக் காரண கர்த்தாவாக விளங்கிய செல்லப்பா, யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரியூட்டப்பட்டமையை அறிந்து அதிர்ச்சியில் உயிரிழந்த தாவீது அடிகள் ஆகியோரை நினைந்து இரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இருவரின் உருவப் படங்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு, சுடர்கள் ஏற்றி, மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து



நினைவுப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ். மாநகரசபையின் பிரதி முதல்வர் இம்மானுவேல் தயாளன், யாழ். மாநகரசபையின் உதவி ஆணையாளர், மாநகரசபை உறுப்பினர்கள், பொதுநூலகப் பிரதம நூலகர் திருமதி சிவகரன் அனுசியா, உதவிப் பிரதம நூலகர், நூலகர்கள், நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள், அங்கத்தவர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26-66)

## கூட்டணிப்...

தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவே உள்ளது. ஏனெனில், நாங்கள் மிகப் பலமாக மீண்டெழுந்துள்ளோம். நாட்டை நிர்வகிக்க முடியாமல் அரசாங்கம் திணறுகின்றது. தற்போதைய அரசாங்கத்தின் இயலாமையை மக்கள் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர்.

மாகாணசபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதியின் பிரதிநிதிகளிடம் அல்லாமல் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால்தான் ஆட்சி நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் நாட்டில் பொறுப்புக்கூறல் ஏற்படும். நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் வரை நாங்கள் இந்த அரசாங்கத்துடன் மோதுவோம் - என்றார். (அ-ம-இ)

## ஒரு கோடியே...

கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நெடுங்கேணியைச் சேர்ந்த மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வல்வெட்டித்துறை - கொம்மாந்துறைப் பகுதியிலுள்ள வீடொன்றில் அண்மையில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபா திருடப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கெருடாவிலைச் சேர்ந்த 16 வயதுச்சிறுவனையும், 19 வயதுடைய இளைஞரையும், நெடுங்கேணியைச் சேர்ந்த இன்னொருவரையும் சந்தேகநபர்களாக அடையாளம் கண்டிருந்தனர். சந்தேகநபர்களில் ஒருவர் வல்லைச் சந்தியிலும் மற்றொருவர் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியிலும் வைத்து கைதுசெய்யப்பட்டனர். நெடுங்கேணியைச் சேர்ந்த நபர் தலைமறைவாகியுள்ளார். இதையடுத்து அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது.

சந்தேகநபர்களிடம் இருந்து 74 லட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை நீதிமன்ற அனுமதி பெற்று தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-ம-26)

## நீதிபதியின்...

அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த விடயத்தில் எழக்கூடிய தேவையற்ற ஊகங்களைத் தவிர்க்கும் நோக்குடனேயே இந்தத் தகவலை வெளியிடுவதாக ஆளுநரின் செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-66)

## தடையற்ற...

டுள்ளன - இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டு மக்களுக்குத் தேவையான எரிபொருளைத் தடையின்றி வழங்குவதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக உள்ளது. உலக சந்தையில் எண்ணெய் விலை உச்சத்தில் காணப்படுகின்றது. தவிர்க்க முடியாத நிலையில்தான் நாங்கள் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டி ஏற்படுகின்றது. விலையேற்றத்தில் கணிசமானவற்றை அரசாங்கம் பொறுப்பெற்றுக்கொண்டு சிறு பகுதியையே மக்களிடம் விடுகின்றோம்.

எரிபொருள் விலையேற்றத்தாலும், எரிபொருள் இன்மையாலும் பல நாடுகள் நிலைகுலைந்துள்ளன. ஆனால் நாங்கள் கியூ.ஆர். முறையை மட்டுமே நடைமுறைப்படுத்தினோம். நெருக்கடியை எதிர்கொள்வதில் வெற்றி கண்டுள்ளோம். எரிபொருள்களின் விலைகளை குறைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டால், கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே அதைச் செய்வோம் - என்றார். (அ-ம-இ)

## ஒரு...

முடிவுகளின் அடிப்படையில் பார்த்தால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேல் மற்றும் வடமத்திய மாகாணசபைகளில் மாத்திரமே வெற்றிபெற்றிருக்கும். ஆனால், அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் மோசடிகள் காரணமாக அந்தப் பகுதி மக்களும் தற்போது விரக்தியின் உச்சத்தில் உள்ளனர். எனவே, தற்போது தேர்தல் நடைபெற்றால் ஒரு சபையைக்கூட திசைகாட்டி அரசாங்கம் கைப்பற்ற வாய்ப்பில்லை - என்றார். (அ-ம-இ)

## மோ.சைக்கிள்...

உதயகுமார் (வயது-38) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். கடந்த 17ஆம் திகதி சைக்கிளில் கடைக்குச் சென்றபோது, திசைமாறி எதிர்த்திசையில் அதிவிரைவாக வந்த மோட்டார்சைக்கிள் அவரை மோதித்தள்ளியுள்ளது. இதையடுத்து படுகாயம் அடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சைக்குப் பின்னர் கடந்த 21ஆம் திகதி அவர் வீடு திரும்பிய போதிலும், கடந்த 25ஆம் திகதி மீண்டும் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து அவர் உடனடியாகத் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## ரூ.10 கோடிக்கு...

வவுனியா - குட்செட் வீதியில் வசித்து வந்த வர்த்தகரே இவ்வாறு தலைமறைவாகியுள்ளார். அவர் நாட்டை விட்டு சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரியவருகின்றது. குறித்த நபர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வவுனியாவில் பல நகைக் கடைகளுடன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

## அநுராதபுர...

சிவில் அமைப்பினர், பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் போராட்டம் வவுனியா பழைய பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக இடம்பெற்றது. பாலியல் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள பிக்குவுக்கு எதிராக எவ்வித பாரபட்சமும் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு, எழுவைதீவு படகுச்சேவை நேரமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தீவகப் பகுதிகளான அனலைதீவு மற்றும் எழுவைதீவுக்கான பயணிகள் படகுச் சேவைகளின் நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. அதற்கமைய அனலைதீவிலிருந்து கண்ணகை அம்மன் துறை நோக்கிய படகுச் சேவைகள் காலை 6 மணி, காலை 7.10 மணி, காலை 8 மணி, காலை 9 மணி, மதியம் 12 மணி பிற்பகல் 2 மணி மற்றும் மாலை 4.30 மணி ஆகிய நேரங்களில் புறப்படவுள்ளன. மறுமார்க்கமாக, கண்ணகை அம்மன் துறையிலிருந்து அனலைதீவு நோக்கி காலை 7மணி, காலை 9மணி, மதியம் 12.15 மணி, பிற்பகல் 2.30 மணி, மாலை 3.45 மணி, மாலை 4.45 மணி மற்றும் மாலை 5.20 மணி ஆகிய நேரங்களில் படகுகள் பயணிக்கவுள்ளன. அதே வேளை, படகுச் சேவைகள் காலை 6.15 மணி, காலை 7.20 மணி, காலை 9.00 மணி, முற்பகல் 11.45 மணி, பிற்பகல் 2.20 மணி மற்றும் மாலை 4.30 மணி ஆகிய நேரங்களில் ஆரம்பமாகவுள்ளன. மறுமார்க்கமாக, கண்ணகை அம்மன் துறையிலிருந்து எழுவைதீவு நோக்கி காலை 7 மணி, காலை 9மணி, மதியம் 12.15 மணி, பிற்பகல் 2.30 மணி, மாலை 3.45 மணி மற்றும் மாலை 5.20 மணி ஆகிய நேரங்களில் படகுச் சேவைகள் முன்னெடுக்கப்படவுள் ளன. எனவே, அரச மற்றும் தனியார் துறை வேலைகளுக்குச் செல்வோர், வியாபாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இந்த புதிய நேர மாற்றங்களை அவதானித்துத் தங்களது அன்றாடப் பயணங்களைத் திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். (ச)



## புலிப்பாஞ்சகல் கடற்கரை சிரமதானப்பணி ஆரம்பம்

முல்லைத்தீவு. ஜூன் 2

முல்லைத்தீவு மாவட்டத்தின் இயற்கை வளமிக்க மற்றும் தனித்துவம் வாய்ந்த கடற்கரைப் பகுதிகளில் ஒன்றான பழைய செம்மலை என அழைக்கப்படும் புலிப்பாஞ்சகல் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் மற்றும் அழகுபடுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் 'க்ளீன் ஸ்ரீலங்கா' தேசிய வேலைத்திட்டத்துடன் இணைந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ. உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயற்பாட்டில், மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்கள், முல்லைத்தீவு மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர் கலாநிதி நவநீதன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். புலிப்பாஞ்சகல் கடற்கரை, முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கியமான இயற்கைச் சுற்றுலாத்தலங்களில் ஒன்றாக விளங்குவதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் அதிகளவில் பார்வையிடும் இடமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)




பருத்தித்துறை ஆதார மருத்துவமனை இரத்த வங்கியில் தற்போது நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற்பாட்டில் 86 ஆவது மாபெரும் குருதிக்கொடை முகாம்நிகழ்வுநேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா.வீரசுரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. (ச-66)

## புகைத்தல், போதை எதிர்ப்பு தினம் நிகழ்ச்சித்திட்டம் யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 2


சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத் தினத்தின் யாழ்ப்பாண மாவட்டமட்ட கொடித்தின நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு 'போதையற்ற ஓர் எதிர்காலம் ஆரோக்கியமான ஓர் தேசம்' எனும் தொனிப்பொருளில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணமாவட்டசமுர்த்திஅபிவிருத்தித்திணைக்களத்தின் பணிப்பாளர் பொ.ஸ்ரீவர்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புதின மாவட்டமட்ட கொடித்தின நிகழ்ச்சித் திட்டத்தை மாவட்டச் செயலர் ம. பிரதீபன் ஆரம்பித்துவைத்தார். (ச-20)



# கதிர்காமம் ஆடிவேல் விழா ஜூலை 15 இல் ஆரம்பம்

## பந்தல்கால் நடும் நிகழ்வு பக்திபூர்வம்



யாழ்ப்பாணம், ஜூன் 2

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவை முன்னிட்டுப் பந்தல்கால் நடும் வைபவம் நேற்றுத் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா அடுத்த மாதம் ஜூலை மாதம்15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை பௌர்ணமி நாளில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறவுள்ளது. இதேவேளை, இந்த ஆலயத்தில் ஆடிவேல் விழா தொடங்குவதற்கு 45 நாள் களுக்கு முன்னர் வைகாசி மாத அமாவாசை அல்லது கார்த்திகை நட்சத்திரத்தை ஒட்டிய சுபமுகூர்த்த நாளில் பந்தல்கால் நடும் வைபவம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-66)

**வேலையாட்கள் தேவை**

கடை ஒன்றிற்கு அலுமினிய பொருத்துனர் மற்றும் கடை உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 440 9920
021 222 7043

(CS31919) A

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 ஆம் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 02.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media